**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.398/2023 [CNR No.TNMD240005772023]</u>**

கவிதா .....வாதி

/ எதிர் /

ஆயம்மாள் ......பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 09.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.எம்.குபேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.கே.தினேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு பிரதிவாதி பிராது தொகை ரூ.2,50,600/–ம், வழக்கு தாக்கல் செய்த நாள்முதல், தீர்ப்பாணை நாள்வரை 12% வருட வட்டியும், அதன் பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் நாள்வரை 6% பின்

வருட வட்டியும் சேர்த்து திரும்ப செலுத்த உத்தரவிடக் கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**<u>2) வாதி வழக்குரையின் சுருக்கம்:–</u>**

i) வாதிக்கு, பிரதிவாதி அவரது மருமகன் செந்தில்குமார் மற்றும் முத்துப்பாண்டிசெல்வி மூலம் நன்கு பழக்கம் ஏற்பட்டு, வாதியும், பிரதிவாதியும் குடும்ப ரீதியாக பழகி வந்துள்ளார்கள். பிரதிவாதி கடந்த 02.09.2021–ம் தேதி வாதி வீட்டிற்கு வந்து குடும்ப கடன்களை தீர்ப்பதற்காக வாதியிடம் ரூ. 2,00,000/– கடனாக கேட்டுள்ளார். வாதியும் அதே நாளில் பிரதிவாதியிடம் ரொக்கமாக ரூ.2,00,000/– கொடுத்துள்ளார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி சாட்சிகள் முன்னிலையில், ஒரு புரோநோட் எழுதி அதில் கடன் தொகை ரூ.2,00,000/–த்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.100/– ரூ.1.00 வீதம் வட்டி கூட்டி, கூட்டிய வட்டியும், அசலும் சேர்த்து வாதிக்கு இரண்டு வருட காலத்திற்குள் கடன் தொகையை திரும்ப கொடுப்பதாக ஒப்புக் கொண்டு புரோநோட்டில் கையொப்பம் செய்துள்ளார்.

ii) அடுத்ததாக, வாதியிடம் பணம் பெற்றுக் கொண்ட நாள்முதல் பிரதிவாதி வாதிக்கு அசலோ, வட்டியோ திரும்ப செலுத்தவில்லை. எனவே, மேற்படி கடன் மற்றும் வட்டி தொகையை கேட்டு கடந்த 04.09.2023–அன்று பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி கடந்த 05.09.2023 அன்று பெற்றுக்கொண்டு 12.09.2023–ம் தேதி உண்மைக்கு புறம்பான சங்கதிகளை தெரிவித்து பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். ஆகவே,

மேற்படி கடன் மற்றும் வட்டி தொகையை கேட்டு வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்வழக்குரையின் சுருக்கம்:–**

i) வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிக்கு வாதியை அவரது மகள் முத்துப்பாண்டி செல்வி மற்றும் மருமகன் செந்தில் குமார் மூலம் தெரியும் என்பது உண்மையாகும். கடந்த 04.09.2023–அன்று பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்பதும், மேற்படி அறிவிப்பை கடந்த 05.09.2023–அன்று பிரதிவாதி பெற்றுக் கொண்டு 12.09.2023–அன்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளதும் உண்மையாகும். மற்ற சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையாகும்.

ii) அடுத்ததாக, வாதியிடம் பிரதிவாதி ரூ.2,00,000/– பெறவில்லை. 02.09.2021–ம் தேதியன்று எவ்வித புரோநோட்டும் எழுதிக் கொடுக்கவில்லை. கடந்த 23.10.2013–ம் தேதியன்று ரூ.1,50,000/– மற்றும் கடந்த 03.11.2013–அன்று ரூ.1,50,000/–மும் கடனாக வாதியிடம் பிரதிவாதியின் மகள் முத்துப்பாண்டி செல்வி பெற்றுள்ளார். மேலும், பிரதிவாதி 2017 வருடம் அக்டோபர் மாத வாக்கில் ரூ.2,00,000/– வாதியிடம் பெற்றுள்ளார். மேற்படி மொத்த தொகை ரூ.5,00,000/–த்திற்கு 5 % வட்டியாகும். இந்நிலையில் பிரதிவாதியின் மகள் பெற்ற கடனுக்கு ஆதரவாக 23.10.2013 மற்றும் 03.11.2013 ஆகிய தேதிகளில் மேலூர் பெடரல் வங்கியின் நிரப்பப்படாத காசோலையை பிரதிவாதியின் மகள் முத்துப்பாண்டி செல்வியிடம் வாதி பெற்றுக்கொண்டுள்ளார். மேலும், பிரதிவாதி கடந்த 2017–ம் வருடம் அக்டோபர் மாதம் பெற்ற கடனுக்கு

ஆதரவாக நிரப்பப்படாத புரோநோட்டில் பிரதிவாதியின் கையொப்பத்தை மட்டும் வாதி பெற்றுக்கொண்டுள்ளார்.

iii) அடுத்ததாக, பிரதிவாதியின் மகள் வாதியிடம் பெற்ற அசல் தொகையை வட்டியுடன் சேர்த்து திரும்ப செலுத்தியுள்ளார். மீதம் ரூ.40,000/- மட்டுமே வாதிக்கு செலுத்த வேண்டியது உள்ளது. வாதியின் கணவர் செல்லப்பாண்டி கடந்த 03.09.2022, 10.10.2022 மற்றும் 07.11.2022 ஆகிய தேதிகளில் பிரதிவாதியின் மகள் முத்துப்பாண்டி செல்வியிடம் தொடர்பு கொண்டு மீதி தொகை ரூ.40,000/- செலுத்த கோரியுள்ளார். பின் பிரதிவாதியின் மகள் 10.11.2022-ம் தேதி வாதியின் நிதி நிறுவனம் அமைந்துள்ள உசிலம்பட்டிக்கு சென்று மீதத்தொகையில் ரூ.37,000/-ஐ நேரில் ரொக்கமாகவும், மீதித்தொகை ரூ.3,000/ வாதி கணவர் G-Pay கணக்கில் செலுத்தியுள்ளார். பிரதிவாதியும் அவரது மகளும் வாதியிடம் பெற்ற மொத்த தொகையினையும் செலுத்தியுள்ளார்கள்.

iv) அடுத்ததாக, 10.11.2022-ம் தேதி பிரதிவாதியும் அவரது மகளும் கடனுக்கு ஆதரவாக கொடுத்த மேலூர் பெரடல் வங்கி காசோலை, பிரதிவாதி கையெப்பமிட்ட நிரப்பப்படாத புரோநோட்டு மற்றும் பிரதிவாதியின் வீட்டின் அசல் பத்திரங்களை கொடுக்குமாறு வாதியிடம் கேட்டுள்ளார்கள். வாதியும் அவரது கணவரும் பிரதிவாதியையும், அவரது மகளையும், தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டல் விடுத்து மேற்படி காசோலை, புரோநோட் மற்றும் பத்திரங்களை தர வேண்டுமெனில் பிரதிவாதியும், அவரது மகளும் வாதி மற்றும் அவரது கணவர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என மிரட்டினார்கள். அதனால்,

வாதி மற்றும் அவரது கணவர் மேற்படி காசோலை மற்றும் புரோநோட்டை பிரதிவாதியிடம் கொடுக்க மறுத்துவிட்டார். வாதி பிரதிவாதியை துன்புறுத்தும் நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யக்கோரி பிரதிவாதியால் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கின் வழக்குரை, எதிர் வழக்குரை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு வழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாண கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the promissory note dated 02.09.2021 is executed by the defendant in consideration of Rs.2,00,000/-?
2. Whether the plaintiff is entitled for recovery of loan amount from the defendants as prayed for?
3. What other relief of the plaintiff is entitled for?

5) வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் சாட்சியாக வா.சா.2 விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>6) எழுவினாக்கள் ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வு:–</u>

1. 02.09.2021–ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு பிரதிவாதியால் மறுபயனுக்காக வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதா?

**2.** வாதி கோரும் கடன் தொகை வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து திரும்ப கிடைக்கத்தக்கதா?

i) முதலாவதாக, தாவா வழக்கில் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்தார். அவர் தன்னுடைய சாட்சியத்தில், பிரதிவாதியை அவரது மருமகன் செந்தில்குமார் மற்றும் முத்துப்பாண்டி செல்வி மூலம் நன்கு பழக்கம் ஏற்பட்டு, அதன் அடிப்படையில் நண்பர்களாக பழகி வந்துள்ளார்கள். அதன் அடிப்படையில் கடந்த 02.09.2021–ம் தேதி பிரதிவாதி முன் கடன்களை தீர்ப்பதற்காக வாதியிடம் ரூ.2,00,000/– கடனாக பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 புரோநோட் எழுதி கொடுத்ததாகவும், பிரதிவாதிகள் அசலும், வட்டியும் திரும்ப கொடுக்காததால் கடந்த 04.09.2023–ம் தேதி வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.3 ஆகவும், பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்தார்.

ii) அடுத்ததாக, பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், பிரதிவாதி வாதியிடமிருந்து கடந்த 02.09.2021–ம் தேதி ரூ.2,00,000/– கடனாக பெறவில்லை. மாறாக, 23.10.2013–ம் தேதி ரூ.1,50,000/– மற்றும் 03.11.2013–ம் தேதி ரூ.1,50,000/– மற்றும் 2017–ம் வருடம் ரூ.2,00,000/– ஆக மொத்தம் ரூ.5,00,000/– மாதம் 5% வட்டிக்கு வாங்கியிருக்கிறார். அப்போது, புரோநோட் மற்றும் மேற்படி தொகைக்கு உத்தரவாதமாக பிரதிவாதியின் வீட்டு பத்திரத்தை 2017–ல் ஒப்படைத்துள்ளார். மேற்படி, கடன் தொகைக்கு பிரதிவாதி பல்வேறு

தேதிகளில் வாதிக்கு பணம் செலுத்தி முடித்துவிட்டார். வாதி நிரப்பப்படாத புரோநோட்டுக்களை வைத்து தாவா வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்பதாகும்.

iii) அடுத்ததாக, பிரதிவாதி வாதியிடமிருந்து பல தேதிகளில் ரூ.5,00,000/- கடன் பெற்றதை ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி பணத்தை எந்தெந்த தேதிகளில் வாதிக்கு திரும்ப கொடுத்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை. மாறாக, கடந்த 03.09.2022, 10.10.2022, 07.11.2022 ஆகிய தேதிகளில் ரூ.40,000/- கொடுத்ததாகவும், G-Pay மூலம் ரூ.37,000/- கொடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆக, மேற்படி தொகைகள் G-Pay மூலம் வழங்கப்பட்டதா? அல்லது எவ்வாறு வழங்கப்பட்டது என்பதைப் பொறுத்து கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் வாதியை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, வா.சா.1-ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **எனது கணவரும், பிரதிவாதியின் மருமகனும் ஒரே இடத்தில் வேலை பார்த்ததால் 2015 லிருந்து 10 வருடங்களாக பழக்கம். பிரதிவாதியின் மகள் மற்றும் மருமகன் அவ்வப்போது, எங்களிடம் பணம் வாங்குவார்கள். பிரதிவாதியின் மகள் எந்த தேதியில், எங்கு வைத்து எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் அவ்வபோது வாங்குவார்கள். பிரதிவாதியின் மகள், மருமகன் வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்துவிட்டனர். பணத்தை திரும்ப கொடுக்காததால் நிரப்பப்படாத காசோலைகளை நான் திரும்ப கொடுத்துவிட்டேன். பிரதிவாதி எந்த தேதியில் எங்கு வைத்து எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் 02.09.2021-ம் தேதி எங்கள் வீட்டில் வைத்து பிரதிவாதி பணம் வாங்கினார்** என வா.சா.1-ன் குறுக்கு

விசாரணை சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும் பொழுது, வாதியிடம் பிரதிவாதி அவ்வபோது பணம் வாங்குவதும், கொடுப்பதுமாக இருந்துள்ளார். கடைசியாக, கடந்த 02.09.2021–அன்று வா.சா.ஆ.1 புரோநோட் மூலமாக ரூ.2,00,000/– கடனாக பெற்றுக்கொண்டதாக சாட்சியம் அளித்திருக்கிறார். பிரதிவாதி தரப்பில், மேற்படி புரோநோட்டில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்து ஒரு மையினாலும், மற்ற விபரங்கள் ஒரு மைனாலும் உள்ளது. புரோநோட்டை வாதி தான் உற்பத்தி செய்திருக்கிறார் என்பதாகும். ஆக, புரோநோட்டிலுள்ள கையெழுத்தை பிரதிவாதி ஒப்புக்கொண்டு இருக்கிறார். கடைசியாக வாங்கிய ரூ.2,00,000/–ஐ பிரதிவாதி வாதிக்கு திரும்ப கொடுக்கவில்லை. ஆகையால், புரோநோட் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகும். ஆக, பிரதிவாதி கடந்த 02.09.2021–க்கு பிறகு வாதிக்கு ரூ.2,00,000/– திரும்ப செலுத்தினார் என்பதை தெளிவுபடுத்த கடமைப்பட்டவராகிறார். தாவா வழக்கில் பிரதிவாதி பி.வா.சா.1–ஆக சாட்சியம் அளித்தார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் பிரதிவாதி தாவா வழக்கில் ரூ.2,30,000/– செலுத்தியதற்கான சலான் ரசீதுகளை பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்தார். மேற்படி பி.வா.சா.ஆ.1 சலான்களை பரிசீலனை செய்யும் பொழுது, கடந்த 27.10.2021–ல் ரூ.23,000/–மும், 21.02.2022–ல் ரூ.1,00,000/–மும் பிரதிவாதி வாதி வங்கிக் கணக்கில் செலுத்தியதாக காணப்படுகிறது. இதுசம்பந்தமாக, கற்றறிந்த வாதி தரப்பு வழக்குரைஞர் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, பி.வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **பி.வா.சா.ஆ.1 சலான் ரசீதுகள் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சலான்கள் 2021, 2022**

**காலத்திற்கான சலான்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ல் முதல் சாட்சியாக எனது மருமகன் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்........பி.வா.சா.ஆ.1 சலான்கள் மூலம் ரூ.23,000/–, ரூ.1,00,000/–, ரூ.15,000/–, ரூ.15,000/– ரூ.3,000/– மற்றும் ரூ.49,000/– செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1–ல் 26.10.2021–ம் தேதி ரூ.15,000/– செலுத்தியதாகவும், 27.10.2021–ம் தேதி ரூ.23,000/– செலுத்தியதாகவும் உள்ளது என்றால் சரிதான்** என ஒப்புக்கொள்வதைப் பார்க்கும் பொழுது, வா.சா.ஆ.1 புரோநோட்டானது, கடந்த 02.09.2021–ம் தேதியிட்டதாகும். மேற்படி தேதிக்கு முன்பாகவே பி.வா.சா.ஆ.1 சலான் மூலம் வாதிக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த 02.09.2021–ம் தேதியிட்ட புரோநோட்டிக்கு கடந்த 26.10.2021–ல் ரூ.15,000/–மும், 27.10.2021–ம் தேதியில் ரூ.23,000/–மும் பிரதிவாதி வாதிக்கு தாவா புரோநோட்டுக்காக பணம் செலுத்தினார் என கூறுவது ஏற்புடையதாக இல்லை. பிரதிவாதியின் பதில் அறிவிப்பை பரிசீலனை செய்யும் பொழுது, பிரதிவாதி கடந்த 02.09.2021–ம் தேதி வாதியிடமிருந்து கடன் பெற்றார் என்பது மறுக்கப்படுகிறது. மாறாக, 23.10.2013–லிருந்து பல்வேறு தேதிகளில் ரூ.5,00,000/– வரை கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார். ஆக, பி.வா.சா.ஆ.1 சாலான் ரசீதுககளில் 02.09.2021–ம் தேதிக்கு பிறகு ரூ.2,00,000/–மும், அதற்குரிய வட்டியும் கொடுத்து முடித்ததாக குறிப்பிடப்படவில்லை. மேலும், பி.வா.சா.ஆ.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், தாவா புரோநோட்டில் பி.வா.சா.ஆ.1–ன் மருமகன்

சாட்சிக் கையெழுத்து செய்ததையும் ஒப்புக்கொண்டு இருக்கிறார். அதுபோன்று, பிரதிவாதியும் கையெழுத்து செய்ததை ஒப்புக்கொண்டு இருக்கிறார். மேற்படி பிரதிவாதியின் மருமகன் பிரதிவாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அவரை விசாரித்தால் தான், எழுதிய புரோநோட்டில் கையெழுத்து போட்டாரா? அல்லது எழுதப்படாத புரோநோட்டில் கையெழுத்து போட்டாரா? அல்லது மேற்படி புரோநோட் கடந்த 02.09.2021–ம் தேதியில் எழுதப்பட்டதா? என்பதை தெளிவுபடுத்த முடியும். ஆக, பிரதிவாதி வேண்டுமென்றே அவரது மருமகனை தாவா வழக்கில் விசாரணை செய்யாமல் தவிர்த்திருத்திருக்கிறார்.

iv) அடுத்ததாக, வா.சா.2 தன்னுடைய சாட்சியத்தில், வா.சா.ஆ.1 புரோநோட் கடந்த 02.09.2021–ம் தேதியில் எழுதப்பட்டது என்றும், மேற்படி புரோநோட்டில் செந்தில்குமார் முதலாவது சாட்சியாகவும், வா.சா.2 இரண்டாவது சாட்சியாகவும் கையெழுத்து செய்ததாகவும், வா.சா.ஆ.1 புரோநோட்டை உறுதிபடுத்தியிருக்கிறார். வா.சா.2–ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, வா.சா.2–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **2017–ம் வருடம் வாதியிடம் ரூ.2,00,000/– கடன் வாங்கியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கடன் பெற்ற சமயத்தில் தான் தாவா புரோநோட் கையெழுத்து மட்டும் வாங்கி வைக்கப்பட்டிருந்தது அதை வாதியை நிரப்பி பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல** என சாட்சியம் அளித்திருப்பதைப் பார்க்கும் பொழுது, ரூ.2,00,000/–மும், அதற்குரிய வட்டியும் பிரதிவாதி வாதிக்கு திரும்ப செலுத்தியதை தெளிவுபடுத்தவில்லை. ஆகவே, வா.சா.ஆ.1 புரோநோட் கடந்த

02.09.2021–ம் தேதியில் வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ.2,00,000/– கடனாக வாங்கியுள்ளார் என்பதை வாதி தெளிவுபடுத்தியுள்ளதால் 1 மற்றும் 2 எழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**7) எழுவினா 3–க்கான தீர்வு:–**

3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி பிராது தொகை ரூ.2,50,600–யை வாதிக்கு திரும்ப செலுத்த வேண்டும் என்றும், மேற்படி பிராது தொகைக்கு பிராது தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை வருட 9% வட்டியும், தீர்ப்பு தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை வருட 6% வட்டியும் வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருகெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 10–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.10 17:12:25 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சிகள்:–**

வா.சா.1 கவிதா (வாதி)

வா.சா.2 சித்ரா (3ம் தரப்பினர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.09.2023 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிரமசாரி நோட் அசல் |
| வா.சா.ஆ.2 | 04.09.2023 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 05.09.2023 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.4 | 12.09.2023 | வாதிக்கு, பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:–</u>**

பி.வா.சா.1 ஆயம்மாள் (பிரதிவாதி)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம்:–</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | --- | பிரதிவாதி வாதிக்கு வங்கியில் பணம் ரூ.2,30,000/–ஐ செலுத்தி பெற்ற கவுன்டர் சலான் ரசீதுகள் அசல் (எண்ணம் 8) (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.10 17:12:32 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.